இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம்

SNU6621 – ஆரம்பக் கல்வி

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 25.04.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

1. “அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள்” என்பதனை சுருக்கமாக விளக்குக.

2. “பாதுகாப்பதற்கான உரிமை” என்பதனால் கருதப்படுவது யாது?

3. “வளமுகாமையாளர்” என்னும் வகிபாகத்தினை ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் எவ்வாறு கையாள்வர் என சுருக்கமாக விளக்குக.

4. ஆரம்ப வகுப்புகளில் மாணவர்கள் கற்கும் நான்கு (04) முறைகளை குறிப்பிடுக.

5.

| | | |
|---|---|---|
| 45 | 32 | 84 |
| -26 | -17 | -57 |
| ---- | ---- | ---- |
| 21 | 25 | 33 |
| ----- | ---- | ---- |

மேலே உள்ள வினாக்கள் தரம் - 3 மாணவன் ஒருவனால் செய்யப்பட்டதாகும். கழித்தலில் மாணவனின் ஏற்படுத்திய வழுக்களை அவதானித்து இணங்கான்க. இவ்வழுவை நீக்குவதற்கு எடுக்கக்கூடிய பொருத்தமான வழிமுறையை முன்வைக்குக.

6. “அனைவருக்கும் கல்வி” என்பதனை சுருக்கமாக விபரிக்குக.

7. 1972 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட கலைத்திட்டத்தின் இயல்புகளை விளக்குக.

8. “கற்றலுக்காக கற்றல்” என்பது அடிப்படை தேர்ச்சியாகும். “கற்றலுக்காக கற்றல்” என்பதனை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 x 5 = 40 புள்ளிகள்)

# பகுதி II

9. i. ஆரம்ப வகுப்பிலுள்ள "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" என்ற பாடத்திற்கு பொருத்தமான ஏதாவதொரு கருப்பொருளை தெரிவு செய்க.

(04 புள்ளிகள்)

ii. நீங்கள் தெரிவு செய்த கருப்பொருளுக்கு ஏற்ப பாடமொன்றை சுருக்கமாக திட்டமிடுக.

(10 புள்ளிகள்)

iii. அதற்கேற்ப மாணவரை கணிப்பீடு செய்வதற்கு பொருத்தமான நியதிகளையும், செவ்வை பார்ப்பு பட்டியலையும் தயாரிக்குக.

(06 புள்ளிகள்)

10. i. "இலங்கையின் ஆரம்பக் கல்வித் துறையினைப் பொறுத்தவரையில் 1972 ஆம் ஆண்டானது முக்கிய மைல் கல்லாகும்" நீங்கள் இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

ii. ஆரம்ப கல்வி ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் இரண்டினை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

11. i. ஆரம்பக் கல்வியின் நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ii. ஆரம்பக் கல்விக் கலைத்திட்டமானது தத்துவவியலாளர்களின் செல்வாக்குக்கு உட்பட்டது.

மகாத்மா காந்தி அடிகளின் கல்வி தொடர்பான தத்துவங்கள்

- ஆரம்ப வகுப்புகளில் கற்றல் - கற்பித்தல் முறையியல்
- ஆரம்ப வகுப்புக்களில் ஆசிரியர் - மாணவர்

என்பன தொடர்பாக ஆரய்க.

(14 புள்ளிகள்)

12. i. ஆரம்ப வகுப்புக்களில் (முதல்நிலை) உள்ள பிள்ளைகளின் விருத்தி இயல்புகளை குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ii. நீங்கள் மேலே விருத்தி இயல்புகளில் ஏதாவது மூன்றினை (3)க் கருத்திற் கொண்டு பிள்ளைகளின் விருத்திற்கு துணைபுரியக்கூடிய விதத்தில் ஆசிரியர் எவ்வாறு வகுப்பறையின் கற்றல் சுற்றாடலை உருவாக்க முடியும் என விளக்குக.

(14 புள்ளிகள்)

13. i. ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குவதில் எதிர்நோக்கும் சவால்களை பட்டியலிடுக.

(08 புள்ளிகள்)

ii. ஆரம்ப கல்வியை பெறாத ஆனால் அந்த வயதில் உள்ள பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய தலையீட்டுக்கான செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரிக்குக.

(12 புள்ளிகள்)

14. i. "கணிப்பீடு" என்பதனால் கருதப்படுவது யாது ?

(05 புள்ளிகள்)

ii. ஆரம்ப வகுப்புகளுக்கு பொருத்தமான கணிப்பீட்டு முறைகள் எவை?

(07 புள்ளிகள்)

iii. ஆரம்ப வகுப்புகளில் முறைமை சாராத கணிப்பீடானது ஏன் முறைமை சார்ந்த கணிப்பீட்டிலும் பார்க்க சிறந்தது என விளக்குக.

(08 புள்ளிகள்)

*-பதிப்புரிமை பெற்றது-*